**தமிழ்நாடு அரசு**

**வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை**

**வட்டாட்சியர் அலுவலகம், வாணியம்பாடி வட்டம்,**

**திருப்பத்தூர் மாவட்டம்.**

**அறிவிக்கை எண்/அ1/1160/2025** **நாள்: 26.09.2025**

திருப்பத்தூர் மாவட்ட வருவாய் அலகில், வாணியம்பாடி வட்டத்தில் காலியாக உள்ள 08 (எட்டு) கிராம உதவியாளர் பணியிடத்திற்கு நேரடி நியமனம் செய்வதற்கான இவ்வலுவலக அறிவிக்கை எண்.அ1/1160/2025, நாள்: 21.07.2025-இன் படி விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன. இந்நேர்வில், தற்போது அதிகபட்ச வயது வரம்பு தளர்வு செய்து அரசு உத்தரவிட்டுள்ளதன் அடிப்படையில் தகுதியுள்ள விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

**(குறிப்பு : இவ்வலுவலக அறிவிக்கை எண்.அ1/1160/2025 நாள்:21.07.2025-இன் படி ஏற்கனவே விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரர்கள் தற்போது விண்ணப்பக்க தேவையில்லை).**

| | | | |
|---|---|---|---|
| 1) | விண்ணப்பங்கள் பெறப்படும் நாள் | : | 29.09.2025 |
| 2) | விண்ணப்பம் சமர்ப்பிப்பதற்கான கடைசி நாள் | : | 13.10.2025 மாலை 5.45 மணி வரை |
| 3) | எழுத்து தேர்வு நடைபெறும் நாள் | : | 12.11.2025 (மாறுதலுக்குட்பட்டது) |
| 4) | நேர்முகத்தேர்வு நடைபெறும் நாள் | : | 27.11.2025 (மாறுதலுக்குட்பட்டது) |

ஊதிய விகிதம் : சிறப்பு காலமுறை ஊதியம் – ரூ.11,100 – 35,100/-

**2. விண்ணப்பிக்க தகுதிகள்**

**1. கல்வித்தகுதி** : தமிழ்நாடு அரசுத்தேர்வுகள் இடைநிலைப்பள்ளி இறுதி வகுப்பு (10 ஆம் வகுப்பு) சான்றிதழ் தேர்வில் (SSLC* – Secondary School Leaving Certificate Examination) தமிழ் ஒரு பாடமாகக் கொண்டு தேர்வு எழுதப்பட்டிருக்க வேண்டும். (தேர்ச்சி / தோல்வி) (குறிப்பு SSLC – Secondary School Leaving Certificate Examination) மதிப்பெண் பட்டியல் கட்டாயம் சமர்ப்பிக்க வேண்டும்.

**2. இதர தகுதிகள்** : i). விண்ணப்பதாரர் வாணியம்பாடி வட்டத்தை சார்ந்தவராகவும் வட்டத்தில் நிரந்தரமாக வசிப்பவராகவும் இருக்க வேண்டும். காலிப்பணியிடம் அறிவிக்கப்பட்ட கிராமத்தை சேர்ந்த விண்ணப்பதாரர்களுக்கு கிராம பணியிடத்திற்க்கு முன்னுரிமை வழங்கப்படும்.

ii). தமிழில் பிழையின்றி எழுத படிக்க தெரிந்திருக்க வேண்டும்.

**3. வயது : 01.07.2025 அன்று**

| வ. எண் | பிரிவு | குறைந்தபட்ச வயது வரம்பு | அதிகபட்ச வயது வரம்பு |
|---|---|---|---|
| 1. | இதர பிரிவினர்/ பொதுப்பிரிவினர் | 21 | 32 |
| 2. | மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / சீர்மரபினர் / பிற்பட்ட வகுப்பினர் / பிற்பட்ட வகுப்பினர் (முஸ்லீம்) | 21 | 39 |
| 3. | அட்டவணை வகுப்பினர் / அட்டவணை வகுப்பினர் (அருந்ததியினர்) / பழங்குடியினர் / ஆதரவற்ற விதவை (எந்த பிரிவினராக இருந்தாலும்) | 21 | 42 |

**<u>மாற்றுத்திறனாளிகளுக்கு</u>**

மாற்றுத்திறனாளிகள் நிர்ணயிக்கப்பட்ட வயது வரம்பிற்கு மேல் 10 ஆண்டுகள் வரை வயது வரம்புச்சலுகை பெற தகுதியுடையவர்கள்.

**<u>முன்னாள் இராணுவத்தினருக்கு (01.07.2025 அன்று)</u>**

பொதுப்பிரிவினர் - அதிகபட்சம் 50 வயது

இதரப்பிரிவினருக்கு - அதிகபட்சம் 55 வயது

**<u>4. தேர்வு முறை</u>**

1. எழுத்துத் தேர்வு
2. மிதிவண்டி/இருசக்கர வாகனம் ஓட்டும் திறன், வாசித்தல் மற்றும் எழுதும் திறன்
3. நேர்காணல்

**<u>5.காலிப்பணியிடங்கள் : 08</u>**

நிரப்பப்படவுள்ள கிராமங்களின் இனசுழற்சி விவரம்:

| வ. எண் | இனசுழற்சி எண் | நிரப்பப்படும் கிராமத்தின் பெயர் | இனசுழற்சி விவரம் |
|---|---|---|---|
| 1 | 37 | வளையாம்பட்டு | மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் / பொது / முன்னுரிமையற்றவர் / மாற்றுத்திறனாளி MBC / DNC / GENERAL / NON PRIORITY / DIFFERENTLY ABLED – LOCOMOTOR DISABILITY |
| 2 | 38 | கொத்தக்கோட்டை | பிற்படுத்தப்பட்டோர் (பிற்படுத்தப்பட்ட முஸ்லீம்கள் தவிர) / பொது / முன்னுரிமையற்றவர் / இராணுவவீரர், தமிழ்வழி BC (other than Muslim) / GENERAL / NON PRIORITY/ EXSERVICEMEN, PSTM |
| 3 | 39 | கவுக்காப்பட்டு | பொது / பெண்கள் / முன்னுரிமையற்றவர் GT/ WOMEN / NON PRIORITY |
| 4 | 40 | அம்பலூர் | பிற்படுத்தப்பட்டோர் முஸ்லீம்கள் / பெண்கள்/ முன்னுரிமையற்றவர் / ஆதரவற்ற விதவை BC Muslim / WOMEN / NON PRIORITY / DESTITUTE WIDOW |
| 5 | 41 | உதயேந்திரம் | பொது / பொது / முன்னுரிமையற்றவர் GT/ GENERAL / NON PRIORITY |
| 6 | 42 | தேவஸ்தானம் | ஆதிதிராவிடர் / பொது / முன்னுரிமையற்றவர் SC / GENERAL / NON PRIORITY |
| 7 | 43 | இராமநாயக்கன்பேட்டை | மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் / பெண்கள் / முன்னுரிமையற்றவர் MBC/DNC / WOMEN / NON PRIORITY |
| 8 | 44 | அம்பூர்பேட்டை | பிற்படுத்தப்பட்டோர் (பிற்படுத்தப்பட்ட முஸ்லீம்கள் |

| | | | |
|---|---|---|---|
| | | | தவிர) / பொது / முன்னுரிமைபெற்றவர் (அரசின் திட்டங்களுக்காக பொதுமக்களின் நிலங்கள், அரசால் கையகப்படுத்தப்பட்டிருப்பின், அந்த குடும்ப உறுப்பினர்களில் எவரேனும் ஒருவர்) [அரசாணை (நிலை) எண்.188, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (பணியாளர்-ப்பி) துறை, நாள்.28.12.1976-ல் வழங்கப்பட்ட முன்னுரிமை] BC (other than Muslim) / GENERAL / PRIORITY [Members of the family whose lands have been acquired for Govt.Purpose (11)*] |

**6. விண்ணப்பிக்கும் முறை**

கிராம உதவியாளர் காலிப்பணியிடங்களுக்கான விண்ணப்பங்களை திருப்பத்தூர் மாவட்டத்தின் அதிகாரப்பூர்வ இணையதளம் (https://tirupathur.nic.in)-இல் பதிவிறக்கம் செய்து அதில் தெரிவிக்கப்பட்டுள்ள விபரங்களுடன் அலுவலக வேலை நாட்களில் வாணியம்பாடி வருவாய் வட்டாட்சியர் அலுவலகத்தில் காலை 10.00 மணி முதல் மாலை 05.45 மணி வரை நேரிலோ அல்லது பதிவு அஞ்சல் மூலமாகவோ விண்ணப்பம் செய்யலாம். விண்ணப்பம் செய்ய வேண்டிய முகவரி

**"வருவாய் வட்டாட்சியர்"**

வட்டாட்சியர் அலுவலகம்,

வாணியம்பாடி வட்டம்,

திருப்பத்தூர் மாவட்டம்-635751

**குறிப்பு** : 1. கூடுதல் விவரங்களுக்கு (https://tirupathur.nic.in) என்ற இணையதளத்தினை பார்க்கவும்.

2.தகுதியான விண்ணப்பதாரர்களுக்கு மிதிவண்டி / இருசக்கர வாகனம் ஓட்டும் திறன், வாசித்தல் / எழுதுதல் திறனறித் தேர்வு மற்றும் நேர்முகத் தேர்வு ஆகியவற்றிற்கு தனித்தனியே கடிதம் அனுப்பி வைக்கப்படும்.

3. நேரம் கடந்து வரும் எந்த விண்ணப்பங்களும் ஏற்கப்படமாட்டாது.

**"வருவாய் வட்டாட்சியர்"**

**வாணியம்பாடி .**